**Akhbar** : Makkal Osai

**Tarikh** : 18 November 2021

**Muka surat** : 1 & 13

**Tajuk** : Isu MITRA di Parlimen. Pertengkaran di antara Halimah dan Rayar.

**Terjemahan** :

Sesi penggulungan Bajet 2022 Kementerian Perpaduan bertukar kecoh apabila beberapa Ahli Parlimen pembangkang, tidak berpuas hati dengan jawapan Datuk Halimah Mohamed Sadique berhubung isu dana Unit Transformasi Masyarakat India Malaysia (MITRA).

Situasi mula 'hangat' selepas RSN Rayer (PH-Jelutong) bangun mencelah sesi penggulungan perbahasan Rang Undang-undang Perbekalan 2022 bagi kementerian berkenaan, kerana tidak berpuas hati dengan keputusan Halimah, menyebabkan berlaku 'pertikaman lidah' antara mereka.

"Perkara ini penting kerana selepas perkara ini dibongkarkan pada sesi lalu, SPRM (Suruhanjaya Pencegahan Rasuah), telah buat satu penyiasatan dan ada tangkapan telah dibuat.

"Persoalan saya sama ada, ada pemimpin parti politik MIC terlibat secara langsung, maka Dewan ini perlu tahu, kerana 16 orang biasa telah ditahan dan melontarkan nama-nama (terlibat)," kata Rayer.

Halimah berkata, keputusan untuk tidak menjawab berhubung isu berkenaan adalah atas nasihat SPRM, kerana dikhuatiri akan menggangu siasatan yang sedang dijalankan.

"Selepas perkara-perkara ini dibangkitkan dalam sesi lepas, kementerian saya telah menyatakan kerjasama dengan SPRM, kita minta SPRM masuk ke dalam kementerian (untuk) menjalankan siasatan ini.

"Sebelum dibangkitkan pun kita telah minta SPRM masuk untuk lihat segala proses permohonan dan kelulusan, yang dibuat dari tahun 2019," katanya.

Selain Rayer, alasan diberikan halimah tidak diterima beberapa Ahli Parlimen lain daripada blok pembangkang, antaranya P.Kasthuriraani (PH-Batu Kawan) yang bangun mencelah dengan mencadangkan supaya laporan MITRA diberikan kepada Ahli Parlimen.

Bagi meredakan keadaan Timbalan Speaker Datuk Mohd Rashid Hasnon mengeluarkan amaran kepada Rayer dan Kasthuriraani, kerana mencelah sesi penggulungan kementerian itu tanpa keizinannya.



# நாடாளுமன்றத்தில் மித்ரா விவகாரம்

# ஹலிமா - ராயர் இடையே வெடித்தது வாக்குவாதம்

கோலாலம்பூர், நவ. 18-

**மித்ரா எனப்படும் மலேசிய இந்தியர் உருமாற்றுப் பிரிவின் நிதி ஒதுக்கீடுகளில் முறைகேடு நிகழ்ந்திருப்பதாகக் கூறப்படும் விவகாரம் மீது நேற்று நாடாளுமன்றத்தில் கடுமையான வாக்குவாதம் வெடித்தது.**

மித்ரா நிதி ஒதுக்கீடுகள் குறித்து தேசிய ஒற்றுமைத்துறை அமைச்சர் டத்தோ ஹலிமா சாடிக் விவரங்களை வெளியிடாததால் வாக்குவாதம் ஏற்பட்டது. மித்ரா நிதி ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை எம்ஏசிசி எனப்படும் ஊழல் தடுப்பு ஆணையம் விசாரிப்பதால் தாம் அது தொடர்பான விவரங்களை வெளியிட முடியாது என்று ஹலிமா குறிப்பிட்டார்.

மித்ரா நிதி ஊழலில் மஇகா தலைவர்கள் யாராவது சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என ஜெலுத்தோங் தொகுதி நம்பிக்கைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.எஸ்.என். ராயர் கேள்வி எழுப்பியபோது ஹலிமா இதனைக் கூறினார்.

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

## நாடாளுமன்றத்தில் மித்ரா...

இந்தப் பிரச்சினை குறித்து பேசுவதற்கு மறுப்புத் தெரிவிக்கும் ஓர் அமைச்சர் எம்ஏசிசிக்குப் பின்புறமாக ஒளிந்துகொள்ள முடியுமா என ராயர் பதில் கேள்வி கேட்டார்.

மக்களவையில் எதைக் கூற வேண்டும் என்பது குறித்து அமைச்சருக்கு எம்ஏசிசி உத்தரவிட முடியுமா என ராயர் கேள்வி எழுப்பினார். இது ஜனநாயகத்திற்கு முரணானது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

ராயருக்குப் பதிலளித்த ஹலிமா, மித்ரா விவகாரம் தொடர்பான கேள்விகளுக்குப் பதிலளிக்கக்கூடாது என்று எம்ஏசிசி உத்தரவிட்டதாக நான் கூறவில்லையே என்று குறிப்பிட்டார்.

எம்ஏசிசி எந்த உத்தரவையும் பிறப்பிக்க முடியாது என்று அமைச்சர் மேலும் சொன்னார். அமைச்சர் ஹலிமா பேசியபோது ராயர் குறிக்கிட்ட பிறகு, உட்காருங்கள் என்று அவர் ராயரை நோக்கிக் கேட்டுக் கொண்டார்.

எதற்காக நீங்கள் பயப்படுகிறீர்கள் என்று ஹலிமாவை நோக்கி ராயர் கேட்டார். நான் பயப்படவில்லை என்று ஹலிமா அவருக்குப் பதிலளித்தார்.

மக்களவையில் இந்தப் பிரச்சினை முதன் முதலாக எழுப்பப்பட்டபோது இதுகுறித்து விசாரிக்கும்படி எம்ஏசிசியை தமது அமைச்சு அணுகியதாகவும் அவர் மேலும் சொன்னார். ஆகவே நான் பயப்படவில்லை. நாங்கள் செய்வதெல்லாம் சட்டத்திற்கேற்ப அமைவதாகும் என்றார் அவர்.

அப்போது மீண்டும் குறுக்கிட்ட ராயர், இந்த விவகாரத்தில் அரசியல் தலைவர்கள் யாராவது சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்று கேட்டார். அவருக்குப் பதிலளித்த ஹலிமா, உட்காருங்கள். ஹீரோ ஆக வேண்டிய அவசியமில்லை என்றார்.

ராயர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிப்பதை எம்ஏசிசியிடம் விட்டு விடப்போவதாகவும் ஹலிமா சொன்னார். ஹலிமா உரையாற்றும்போது குறுக்கிட வேண்டாம் என்று ராயருக்கு துணை சபாநாயகர் முகமட் ரஷிட் ஹஸ்னுன் எச்சரிக்கை விடுத்தார்.

இதற்கிடையே ஈப்போ பாராட் நம்பிக்கைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் எம். குலசேகரன், ஈப்போ தீமோர் நம்பிக்கைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் வோங் கா வோ ஆகியோரும் எழுந்து நின்று கேள்வி எழுப்ப முயன்றனர்.

பத்து காவான் நாடாளுமன்ற உறுப்பினர் கஸ்தூரி ராணி பட்டுவும் நிதி அறிக்கை குறித்து கேள்வி எழுப்பினார். புலன் விசாரணை முடிந்த பிறகே அந்த அறிக்கையை வெளியிட முடியும் என்று அமைச்சர் ஹலிமா பதிலளித்தார்.